தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்



| Vol: 03 | Issue: 251 | 4 Pages | 19.07.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 251 | 4 பக்கங்கள் | 19.07.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை**

**விளக்கம்:**
உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

# தமிழகத்தில் காலியாக உள்ள தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் எப்போது? தேர்தல் ஆணையர் பதில்



புதுடெல்லி, ஜூலை 19

கடந்த ஏப்ரல் மாதம் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்ற முதல் அமைச்சர் விஜய், பின்னர் திருச்சி கிழக்கு தொகுதி பதவியை ராஜினாமா செய்தார். அதிமுக தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கரூர் தொகுதியில் போட்டியிட்டு வென்ற எம்.ஆர். விஜயபாஸ்கர், விராலிமலை தொகுதி சி. விஜயபாஸ்கர், பெருந்துறை தொகுதி ஜெயக்குமார் மற்றும் அம்பாசமுத்திரம் தொகுதி இசக்கி சுப்பையா, மதுராந்தகம் தொகுதி மரகதம் குமாரவேல், தாராபுரம் சத்யபாமா ஆகியோரும் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர்.

இதனால் தமிழகத்தில் 7 தொகுதிகளில் இடைத்தேர்தல் நடத்த வேண்டியுள்ளது. எம்.எல்.ஏக்கள் ராஜினாமா விவகாரம் தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இதனால், இந்த 7 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் எப்போது நடைபெறும் என்ற கேள்வி எழுந்துள்ளது

இந்த நிலையில், டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரிடம் செய்தியாளர்கள் இது பற்றி கேட்டனர். அதற்கு ஞானேஷ் குமார் அளித்த பதிலில் கூறியதாவது; தமிழகத்தில் காலியாக உள்ள 7 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடத்த 6 மாத கால அவகாசம் உள்ளது. தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டுள்ளோம். தேர்தல் வழக்குகள் முடிந்த பின் இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்படும்" என்றார்.

# சீனாவில் பயங்கர நிலச்சரிவு: பலர் மண்ணில் புதைந்திருக்கலாம் என தகவல்



பிஜீங்,

சீனாவின் சோங்க்சிங் நகரில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவால் பல வீடுகள் இடிந்து விழுந்தன. பாறைகள் சரிந்து சாலைகள் மூடப்பட்ட நிலையில், பலர் மண்ணில் புதைந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சீனாவின் சோங்க்சிங் நகரில் இன்று காலை 9.08 மணியளவில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவினால் மலைச்சரிவின் கீழ் பகுதியில் இருந்த பல குடியிருப்பு கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளன.

நிலச்சரிவால் பல வீடுகள் இடிந்து நொறுங்கியுள்ள நிலையில், இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் சுமார் 100 மீட்புக்குழுவினரும் 200 தீயணைப்பு வீரர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 9 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலும் பலரைக் காணவில்லை என கூறப்படுகிறது. மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்லனர்.

அவர்களுக்கு உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நிலச்சரிவு ஏற்பட்டதற்கான உடனடி காரணம் என்ன என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

சிசிடிவி வெளியிட்ட காட்சிகளின்படி, வான்வழிப் படக்காட்சிகள், ஆற்றங்கரையில் உள்ள குடியிருப்பு கட்டிடங்களின் மீது பாறைகளும் இடிபாடுகளும் விழுவதைக் காட்டுகின்றன. அதே நேரத்தில் மக்கள் தங்களுக்குப் பின்னால் எழும் அடர்ந்த தூசிக் கூட்டத்திற்கு மத்தியில் தப்பி ஓடுவதையும் காண முடிகிறது.

காணொளி ஒன்றில் மலையின் ஒரு பகுதி சரிந்து கீழே உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களின் மீது விழுவதையும், இதனால் இடிபாடுகள் சாலையில் சிதறி, அவ்வழியாகச் சென்ற கார்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் உடனடியாக நிறுத்தப்படுவதையும் காட்டுகிறது.

# 'தேர்தல் தோல்வி தொடர்பான டிரம்ப்பின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது' சீனா பதிலடி

பீஜிங்,

அமெரிக்காவில் விரைவில் நடக்க இருக்கும் இடைத்தேர்தல் குறித்து ஜனாதிபதி டிரம்ப் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் 25 நிமிடங்கள் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "2020 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், என்னை தோற்கடிக்க சீனா பல்வேறு சதித்திட்டங்களில் ஈடுபட்டது. அமெரிக்காவின் 22 கோடி வாக்காளர்களின் விவரங்களை சீனா விலை கொடுத்து சட்டவிரோதமாகப் பெற்றது.

எனக்கு எதிராக எதிர்மறையான செய்திகளை எழுத, அமெரிக்க பத்திரிகையாளர்களுக்கு சீனா பெருமளவில் பணம் கொடுத்தது. நவம்பரில் நடக்கவிருக்கும் இடைத்தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடைமுறையின் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். மேலும், புதிய வாக்காளர் அடையாள அட்டை மசோதாவை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், தேர்தல் தோல்வி தொடர்பான டிரம்ப்பின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என சீனா பதிலடி கொடுத்துள்ளது. இது குறித்து சீனாவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் லின் ஜியான் கூறுகையில், "சீனா மீதான டிரம்ப்பின் குற்றாச்சாட்டு முற்றிலும் கற்பனையானது. சீனாவை களங்கப்படுத்தும் நோக்கில் இந்த குற்றச்சாட்டு கூறப்பட்டுள்ளது. அமெரிக்க தேர்தல்களில் தலையிடுவதில் எங்களுக்கு எந்த ஆர்வமும் இல்லை, நாங்கள் ஒருபோதும் அவ்வாறு செய்ததில்லை.

சீனாவுக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறுவதை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும். அமெரிக்க அரசு தங்கள் நாட்டில் நடக்கும் தேர்தல்களில் சீனாவை ஒரு பிரச்சினையாக காட்டுவதை நிறுத்திவிட்டு, சீனாஅமெரிக்கா உறவுகளை வளர்ப்பதற்கு உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் வலியுறுத்துகிறோம்" என்று தெரிவித்தார்.

# "தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட உறுதியேற்போம்" முதல்வர் விஜய்

சென்னை

தமிழ்நாடு நாளை ஒட்டி "சங்கம் கண்ட செம்மொழியின் தாயகமாக, சமத்துவமும், சமூகநீதியும் தழைத்தோங்கி, கல்வியிலும், தொழில்நுட்பத்திலும், திறன்மிகு மனிதவளத்திலும் சிறந்தோங்கும் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கிட இந்நாளில் உறுதியேற்போம்" என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தமிழரின் தொன்மை, வரலாறு, பண்பாடு, மொழியுணர்வைப் போற்றும் வகையில் நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட இந்நாளில், தமிழ் மக்கள் அனைவருக்கும் மனமார்ந்த 'தமிழ்நாடு நாள்' நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



மெட்ராஸ் மாநிலமாக உருவான நவம்பர் 1ஆம் நாளையும், 'தமிழ்நாடு' எனும் பெயர் சூட்ட பேரறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஜூலை 18 ஆம் நாளையும்

இந்த அரசு கொண்டாடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# டெல்டா மாவட்டங்களில் கருகும் 3.50 லட்சம் ஏக்கர் நெற்பயிர் வேளாண் அமைச்சர் சொன்ன பதில்



கும்பகோணம்

'டெல்டா மாவட்டங்களில் 3.50 லட்சம் ஏக்கர் குறுவை நெற்பயிர் கருகி கேள்விக்குறியாக வாய்ப்புள்ளதே?' என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "வரும் காலங்களில் உங்களிடம் கூறுவோம்" என்று வேளாண்மை துறை அமைச்சர் வினோத் தெரிவித்தார்.

அவர் இன்று கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் கூறியது: "கும்பகோணத்தில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்புமுகாமில்200க்கும்மேற்பட்டநிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. இதுவரை சுமார் 5,000 பேர் பதிவு செய்துள்ள நிலையில், 50 பேருக்கு உடனடியாக வேலைவாய்ப்பு பணி நியமன ஆணைகளும், மேலும் 50 பேருக்கு திறன் பயிற்சிக்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து முகாமில் பங்கேற்றுள்ள நிறுவனங்களில் உரிய தகுதி பெற்று தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்படும்.

கடந்த 10 ஆண்டுகளாக நெல் மூட்டைகள் மற்றும் சாக்குகள் அடுக்கி வைக்கப்பட்டு வீணானதற்கு முந்தைய அரசே காரணம். தற்போதைய ஆட்சியில் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்றார்.

தொடர்ந்து, 'ஆற்றில் நீர் வரவில்லை. நிலத்தடி ஏற்பட்டு குறைந்துவிட்டது. போதிய அளவில் மின்சாரம் இல்லை. டெல்டா மாவட்டங்களில் 3.50 லட்சம் ஏக்கர் குறுவை நெற்பயிர் கருகி கேள்விக்குறியாக வாய்ப்புள்ளதே?' என்ற கேள்விக்கு, "வரும் காலங்களில் உங்களிடம் கூறுவோம்" எனத் தெரிவித்தார். முன்னதாக, தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதாரஇயக்கம்சார்பில்தனியார்துறைவேலைவாய்ப்பு முகாம்கும்பகோணத்தில்நடைபெற்றது. மாவட்டஆட்சியர் ரேவதி தலைமை வகித்தார். தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய உதவி இயக்குநர் பரமேஸ்வரி வரவேற்றார். திருச்சி மண்டல வேலை வாய்ப்பு இணை இயக்குனர் அருணகிரி திட்ட விளக்கவுரையாற்றினார். வேளாண்மை துறை அமைச்சர் வினோத் மற்றும் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் ஷாஜகான் ஆகியோர் விழா உரையாற்றி, தனியார் நிறுவனங்களில் தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினர். மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், கோட்டாட்சியர் திருமலை, சாஸ்திரா பல்கலைக்கழக முதல்வர் சாந்தி, தஞ்சாவூர் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் சித்ரா ஆகியோர்வாழ்த்துரைவழங்கினர். முடிவில்தஞ்சாவூர் மாவட்ட திறன் அலுவலர் குழந்தைவேலு நன்றி கூறினார்.

# திருவொற்றியூரில் மாடு அறுக்கும் பிரச்சனையில் ஈடுபட்ட பாரத் முன்னணி கட்சியை சேர்ந்த நிர்வாகியை கைது செய்யக்கோரி இந்திய தேசிய லீக் கட்சி சார்பாக உதவி ஆணையரிடம் புகார் மனு



திருவொற்றியூர் தாங்கல் பகுதியில் அலி என்பவர் மாட்டிறைச்சி கடையில் மாடு வெட்டும்போது பாரத் முன்னணியை சேர்ந்த சிவாஜி என்பவர் ஆட்களுடன் சென்று தகராறு ஈடுபட்டுள்ளார் இதனைத் தொடர்ந்து நேற்று இரவு நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் திருவொற்றியூர் காவல் நிலையம் வந்து புகார் அளித்தனர். இதனைத் தொடர்ந்து பாரத் முன்னணியை சேர்ந்த சிவாஜி மீது சி எஸ் ஆர் போடப்பட்டது இந்நிலையில் இந்திய தேசிய லீக் கட்சி சார்பில் மாநிலத் தலைவர் தடா ரஹீம் அறிவுறுத்தலின் பேரில் திருவள்ளூர் மாவட்ட தலைவர் பாட்ஷா தலைமையில் நிர்வாகிகள் இன்று தொடர்ந்து இஸ்லாமிய வழிபாட்டு தலங்களை பிரச்சனை மற்றும் ஆடு மாடு அறுக்கும் பிரச்சனையில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் சிவாஜி மீது கைது நடவடிக்கை எடுக்க கோரி கட்சியின் நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி மனிதநேய ஜனநாயக கழக கட்சி வடசென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் மௌலானா மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் திருவொற்றியூர் உதவி ஆணையர் இடம் புகார் மனுவை வழங்கினர்.

# ஆந்திராவில் இருந்து குட்கா கடத்தி வந்த இருவர் கைது 117 கிலோ குட்கா பறிமுதல்



சென்னை பள்ளிக்ககரணை காமாட்சி மருத்துவமனைசந்திப்பில், பள்ளிக்கரணை காவல் ஆய்வாளர் பிரதீப் தலைமையிலான குழு நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அவ்வழியாக வந்த ஆட்டோவை மடக்கி சோதனை நடத்தினர். அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா 117 கிலோ இருந்தது தெரியவந்தது. இதையடுத்து, குட்கா கடத்தலில் ஈடுபட்ட புது வண்ணாரப்பேட்டையை சேர்ந்த ராஜகோபாலன்(46), தீபக்(23) ஆகிய இருவரைகைது செய்தனர். விசாரணையில், ராஜகோபாலன், ஆந்திராவில் இருந்து குட்கா பொருட்களை கடத்தி வந்து, பள்ளிக்கரணை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர். கடத்தலுக்கு பயன்படுத்திய ஆட்டோவும் பறிமுதல் செய்தனர்.

# சென்னையில் 500 ரூபாய் கள்ளநோட்டுகள் பதுக்கிய வழக்கில் மலேசிய பெண் கைது: பரபரப்பு தகவல்கள்

சென்னை, ஜூலை 19

சென்னை திருவல்லிக்கேணியில் 500 ரூபாய் கள்ளநோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் மலேசிய பெண் கைது செய்யப்பட்டார்.

சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள 'லாட்ஜ்' ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 11 லட்சம் மதிப்புள்ள 500 ரூபாய் கள்ள நோட்டுகள், கத்தை, கத்தையாக பறிமுதல் செய்யப்பட்டது. இந்த நோட்டை பதுக்கி வைத்திருந்ததாக, ஷபீர்குமான் (வயது 37) என்ற 'டிராவல்ஸ்' அதிபர் கைது செய்யப்பட்டார். அவரது 'டிராவல்ஸ்' நிறுவனம் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ளது.

அவரிடம் இருந்து 11 லட்சம் மதிப்புள்ள 500 ரூபாய் கள்ள நோட்டுகளும், ரூ.11.21 லட்சம் உண்மையான 500 ரூபாய் நோட்டுகளும் மற்றும் 25 ஆயிரம் 'யூரோ கரன்சி' நோட்டுகளும் கைப்பற்றப்பட்டது. இவர் கொடுத்த தகவலின்பேரில், தஞ்சாவூரை சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவரையும், போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து ரூ.22.79 லட்சம் உண்மையான ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டது. இவர்கள் இருவரிடம் இருந்தும் ரூ.34 லட்சம் உண்மையான 500 ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளது.



இவர்களிடம் கைப்பற்றப்பட்ட கள்ளநோட்டுகள் அசல் நோட்டுகளை போலவே உள்ளன. இந்த கள்ள நோட்டுகளை மலேசியாவில் அச்சடித்ததாக தெரிய வந்துள்ளது. கைதான ரவிச்சந்திரன், மலேசியாவில் சில காலம் தங்கியிருந்து வேலை பார்த்துள்ளார். அப்போது கள்ளநோட்டு கும்பலோடு இவருக்கு தொடர்பு ஏற்பட்டுள்ளது.

மலேசியாவை சேர்ந்த பரிமளா, புவனேஸ்வரி ஆகிய 2 பெண்கள் இந்த கள்ளநோட்டு கும்பலோடு தொடர்பில் இருந்துள்ளனர். அவர்கள் இருவரும் மாம்பலத்தில் உள்ள ஒரு லாட்ஜில் தங்கியிருந்தனர். போலீசார் அவர்களை சுற்றி வளைத்தனர். அப்போது, பரிமளா தப்பி ஓடிவிட்டார். புவனேஸ்வரி மட்டும் போலீசாரிடம் மாட்டினார். அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது.

கள்ளநோட்டுகள் மலேசியாவில் இருந்து, விமானத்தில் கொண்டு வரப்பட்டதாக கூறப்படுகிறது. விமானத்தில் எப்படி கொண்டு வந்தார்கள்? என்பது குறித்து தீவிர விசாரணை நடக்கிறது. தப்பி ஓடிய பரிமளாவுக்குதான் அதுபற்றிய விவரம் தெரியும் என்று புவனேஸ்வரி கூறியுள்ளார். பரிமளா மலேசியா தப்பி சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவரை கைது செய்யும் முயற்சியிலும் போலீசார் இறங்கியுள்ளனர். ரூ.1.10 கோடி அளவுக்கு, மலேசியாவில் இருந்து கள்ள நோட்டுகளை கொண்டு வந்திருக்கலாம் என்று போலீசார் கருதுகிறார்கள். அவற்றில் ரூ.34 லட்சம் வரை கள்ளநோட்டுகளை புழக்கத்தில் விட்டுள்ளனர். மீதி கள்ள நோட்டுகள் என்ன ஆனது? எனவும் விசாரணை நடக்கிறது.

இந்த நிலையில் போலீசாரிடம் சிக்கிய மலேசிய பெண் புவனேஸ்வரி(48) நேற்று முறையாக கைது செய்யப்பட்டார். தப்பி சென்ற பரிமளாவும், புவனேஸ்வரியும் சேர்ந்து கள்ளநோட்டுகளை மலேசியாவில் இருந்து தமிழகம் கொண்டுவந்துள்ளதாக தெரியவருகிறது. மலேசியா தப்பி சென்ற பரிமளாவை, சர்வதேசபோலீஸ் உதவியுடன் கைதுசெய்யும் நடவடிக்கையில் போலீசார் இறங்கியுள்ளனர்.

இந்த வழக்கில் மலேசியா போன்ற வெளிநாட்டு தொடர்பு விவரங்கள் வருவதால், திருவல்லிக்கேணி போலீசார் இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்ற பரிந்துரை செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வழக்கில் 500 ரூபாய் கள்ளநோட்டுகள் மட்டுமல்லாது, 100, 200 ரூபாய் கள்ளநோட்டுகளும் சிக்கியுள்ளதாக போலீசார் நேற்று இரவு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர். கைதான 3 பேரிடம் இருந்தும், பல்வேறு பெயர்களில் 16 'பாஸ்போர்ட்டுகளும்' பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# சென்னை தொலைபேசி பிரிவின் பி.எஸ்.என்.எல். புதிய தலைமை பொதுமேலாளர் பொறுப்பேற்பு

சென்னை, ஜூலை 19

பி.எஸ்.என்.எல். சென்னை தொலைபேசி பிரிவின் புதிய தலைமை பொது மேலாளராக பி.சுதாகர ராவ் நேற்று பொறுப்பேற்றார். இவர் 1992ம் ஆண்டு இந்திய தொலைத்தொடர்பு சேவை அதிகாரி ஆவார். பி.எஸ்.என்.எல். தமிழ்நாடு வட்டத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்பிரிவின்முதன்மை பொதுமேலாளராக பணிபுரிந்தார். தொலைதொடர்பு துறையின் பல்வேறு




பிரிவுகளில் அனுபவம் கொண்டவர்.

குறிப்பாக புதிய தொழில்நுட்ப சுவிட்சுகள், தொலைதொடர்பு நெட்வொர்க் நிர்வாகம் மற்றும் திட்டமிடல், 'மொபைல் கோர் நெட்வொர்க்' இயக்கம் மற்றும் பராமரிப்பு, செல்போன் இணைப்பு திட்டமிடல் மற்றும் பி.எஸ்.என்.எல். விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்பிரிவுகளில் அனுபவம் பெற்றவர். இவர்ஒருங்கிணைந்த ஆந்திரபிரதேசவட்டம், வடகிழக்கில் உள்ள ஷில்லாங், தெலுங்கானா வட்டம் மற்றும் தமிழ்நாடு வட்டம் என நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல முக்கியப் பொறுப்புகளில் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாட்டில் 'ரெஸ்டோ பார்' தொடங்க திட்டமா? அமைச்சர் விக்னேஷ் விளக்கம்

சென்னை, ஜூலை 19

தென்மாநிலங்களில் போதைப்பொருட்கள் ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக முதல் அமைச்சர் விஜய்யை கேரள அரசின் உள்துறை மந்திரி ரமேஷ் சென்னிதலா கடந்த 15 ந்தேதி சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்துபேசினார். அப்போது தமிழக மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் விக்னேஷ் உடனிருந்தார்.

இந்த ஆலோசனையில், கேரளாவில் 'ரெஸ்டோ பார்'கள் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைக்கிறது என்று அம்மாநில மந்திரி ரமேஷ் சென்னிதலா கருத்து தெரிவித்ததாகவும், அதன் அடிப்படையில் தமிழ்நாட்டிலும் 'ரெஸ்டோ பார்' களை கொண்டு வருவதற்கு 'டாஸ்மாக்' நிர்வாகம் உடனடி பரிசீலனையில் இறங்கியதாகவும் பரபரப்பு தகவல்கள் வெளியானது.

ஏற்கனவே, அ.தி.மு.க. ஆட்சியில் 'ரெஸ்டோ பார்'களை கொண்டு வருவதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் கடும் எதிர்ப்பு கிளம்பியதால் கைவிடப்பட்டது. இந்த நிலையில்



மீண்டும் எதிர்ப்பு கிளம்பி உள்ள நிலையில், இது தொடர்பாகதமிழக மதுவிலக்கு ஆயத்தீர்வை அமைச்சர் விக்னேஷ் விளக்கம் அளித்துள்ளார்.

அவர் கூறும்போது, 'உணவகத்துடன் கூடிய மதுபானக்கூடம் (ரெஸ்டோ பார்) திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக 'டாஸ்மாக்' நிர்வாகம் அதிகாரபூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. துறையை சீரமைக்க சில ஆலோசனைகள், விவாதங்கள் மேற்கொள்ளப்படலாம்.

இது தொடர்பாக அதிகாரபூர்வ அறிவிப்பு எதுவும் 'டாஸ்மாக்' நிர்வாகம் வெளியிடவில்லை' என்று தெரிவித்துள்ளார்.

# தவெக எம்.எல்.ஏ.விடம் குதிரை பேரம்: 3 பேரின் ஜாமீன் மனு தள்ளுபடி

சென்னை, ஜூலை 19

த.வெ.க. எம்.எல்.ஏ.விடம் பேரம் பேசியதாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் கடந்த 1ந்தேதி கைதான நரேஷ், ரமேஷ், கார்த்திக் ஆகிய 3 பேரும் ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர். அரசியல் காரணங்களுக்காக தங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும், போலீசார் கூறும் குற்றச்சாட்டுக்கும், தங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றும், வழக்கு விசாரணைக்கு முழுஒத்துழைப்பு அளிக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

இந்த மனு, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி கார்த்திகேயன் முன் விசாரணைக்கு வந்தபோது, திருவல்லிக்கேணி சரக போலீஸ் தரப்பில் ஆஜரான வக்கீல், வழக்கு விசா




ரணை ஆரம்ப கட்டத்தில் உள்ளதாகவும், தற்போதைக்கு ஜாமீன் வழங்கினால் விசாரணை முழுவதும் பாதிக்கப்படுவதோடு, சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளதாகவும் வாதிட்டார். இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதி, போலீசாரின் வாதங்களை ஏற்று 3 பேரின் ஜாமீன் மனுக்களை தள்ளுபடிசெய்துஉத்தரவிட்டார்.

# முதல்அமைச்சர் தனது தோழமைக் கட்சியிடம் பேசி தமிழகத்தின் உரிமைகளைப் பெற வேண்டும்! நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூலை 19

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், தமிழகத்தின் உரிமைகளையும் ஒருசேர கேள்விக்குறியாக்கும், காவிரி, மேகதாது, முல்லை பெரியாறு உள்ளிட்ட அணை நீர் பிரச்சினைகளை வைத்து இதற்கு முந்தைய அரசு அரசியல் மட்டும் தான் செய்ததே தவிர, தீர்வு காணவில்லை. பல ஆண்டுகளாக நீடிக்கும் இப்பிரச்சினைகளுக்காக கர்நாடகா, கேரளா உள்ளிட்ட அண்டை மாநிலங்களுடன் பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தியும் எவ்வித பலனுமில்லை.

இதற்கிடையில், மேகதாது அணையை கட்டுவதற்கு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, மறைமுக அனுமதி வழங்கியிருப்பதைப்போல, ஜோசப் விஜய்யின் கூட்டணிக் கட்சிதலைவரானவைகோ போன்றவர்கள் பொய் பரப்புரைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற உண்மைக்கு புறம்பான செய்திகளை பொதுவெளியில் பரப்புவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. அறநெறியி



லான அரசியலுக்கு நேர் எதிரானது.

எனவே, தமிழகத்தில் தற்போது ஆட்சியில் இருக்கும் தமிழக முதல்அமைச்சர் ஜோசப் விஜய், இந்த நீண்டகால பிரச்சினைகளுக்கும், தேவையற்ற வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்! கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்த கதை போல் இல்லாமல், தனது கூட்டணிக்கட்சியான காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியிடம் பேசி, காங்கிரஸ் ஆளும் கர்நாடகா, கேரளா மாநில முதல் மந்திரியின் ஒத்துழைப்போடு, இந்த அணைப் பிரச்சனைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண வேண்டும்! விவசாயப் பெருமக்களின் துயர் துடைக்க வேண்டும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வட்டாட்சியர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத் துறை அதிரடி சோதனை: ரூ.82 லட்சம் பறிமுதல்

சென்னை, ஜூலை 19

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் இன்று அதிரடி சோதனை நடத்தினர். பொதுமக்களிடமிருந்து தொடர்ந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த சோதனையில், கணக்கில் வராத ரூ.82 லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பட்டா மாறுதல், வருமானம், இருப்பிடம், சமூகச் சான்றிதழ்கள் உள்ளிட்ட அரசு சேவைகளை வழங்குவதற்காக சில வட்டாட்



சியர் அலுவலகங்களில் அதிகளவில் லஞ்சம் பெறப்படுவதாக தொடர்ந்து புகார்கள் எழுந்தன. இதையடுத்து மாநிலம் முழுவதும் ஒரே நேரத்தில் பல்வேறு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

41 இடங்களில் சோதனை நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் 35 தாலுகா அலுவலகங்களில் கணக்கில்காட்டப்படாதரொக்க பணம் சிக்கியது. இதில், கணக்கில் காட்டப்படாத ரொக்கமாக ரூ.13 லட்சமும், ஆன்லைன் பரிவர்த்தனைகள் மூலம் பெறப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ரூ.68 லட்சமும் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டது. மொத்தமாக ரூ.82 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக லஞ்சஒழிப்புத்துறை தெரிவித்துள்ளது.

சோதனையின்போது முக்கிய ஆவணங்கள் மற்றும் பரிவர்த்தனை தொடர்பான பதிவுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் அதிகாரிகள் தீவிர விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

# குதிரை பேரம் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற கோரிய பொதுநல மனு தள்ளுபடி

சென்னை, ஜூலை 19

ஊத்தங்கரை தவெக எம் எல்ஏவான இளையராஜா விடம் குதிரை பேரம் நடத்தியதாக திருவல்லிக்கேணி போலீசார் பதிவு செய்துள்ள வழக்கை சி.பி.ஐ., விசாரணைக்கு மாற்றக்கோரி சென்னை ஐகோர்ட்டில் திருப்பூரைச் சேர்ந்த பாலசுப்பிரமணி என்பவர் பொதுநல வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் விசாரித்து, பிறப்பித்த தீர்ப்பில், ''உள்ளூர் போலீசார் சரி வர வழக்கை விசாரிக்க



வில்லை என்றாலோ, உண்மையை கண்டறிய முடியவில்லை என்றாலோ அல்லது சமரசமாக சென்றாலோ வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றலாம்.

இதுபோன்ற ஒரு சூழ்நிலையைக்கூட மனுதாரர் எடுத்துக்கூறி நிரூபிக்கவில்லை. செய்தி தாள் வந்த செய்திகள், சமூக ஊடகங்களில் வந்த தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சி.பி.ஐ. விசாரணைக்கு கேட்டு வழக்கு தொடர்ந்துள்ளார், இவர் கூறும் காரணத்துக்காக சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்ற முடியாது. பொதுநல வழக்கு என்பது வலிமைமிக்க ஒரு ஆயுதம்.

அது குரலற்றவர்களின் குரலாக ஒலிக்கூடியது. இந்த குதிரை பேரம் வழக்கில் ஏற்கனவே பலரை போலீசார் கைது செய்துள்ளனர். எனவே, சரி பார்க்கப்படாத ஊடக செய்திகளின் அடிப்படையில் புலன்விசாரணையை மாற்ற முடியாது.

இந்த பொதுநல வழக்கை தள்ளுபடி செய்கிறோம்'' என்று கூறியுள்ளனர்.

# டாஸ்மாக் விவகாரம்: தமிழக அரசின் இரட்டை நிலைப்பாடு ஏன்? வேல்முருகன் கேள்வி



சென்னை, ஜூலை 19

தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

தமிழகத்தில் டாஸ்மாக் கடைகளில் புதியதாக 54 வகையான மதுபானங்களை அறிமுகப்படுத்தும் முயற்சி, அரசின் கொள்கைக்கும் செயலுக்கும் இடையே உள்ள முரண்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 717 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அது மக்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்றும், படிப்படியாக டாஸ்மாக் கடைகள் குறைக்கப்படும் என்றும் தமிழக மக்களுக்கு உறுதியளிக்கப்பட்டது.

அப்படியிருக்க, தற்போது புதிய 54 வகையான மதுபானங்களை அறிமுகப்படுத்துவது எதற்காக?

டாஸ்மாக் கடைகளைக் குறைப்பதே அரசின் நோக்கமென்றால், புதிய மதுபானங்களை அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் என்ன? மதுப்பழக்கத்தை ஒழிப்பதே இலக்கென்றால், புதிய பிராண்டுகள் மூலம் விற்பனையை விரிவுபடுத்துவது யாருடைய நலனுக்காக?

ஏற்கனவே மதுப்பழக்கத்தால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சீரழிந்துள்ளன. குடும்ப வன்முறைகள், சாலை விபத்துகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், கொலை, கொள்ளை உள்ளிட்ட பல குற்றச் செயல்களில், மதுபோதையும் ஒரு முக்கிய காரணியாக, காவல்துறை விசாரணைகளில் அடிக்கடிப் பதிவாகி வருகிறது.

மதுவால் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, மனநல மற்றும் சமூக ரீதியிலும் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. இந்த நிலையில், மதுப்பழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக புதிய மதுபான வகைகளை அறிமுகப்படுத்துவது, சமூகப் பொறுப்புள்ள அரசின் செயலாக கருத முடியாது.

ஒரு புறம் டாஸ்மாக் கடைகளை மூடுகிறோம் என்று கூறிவிட்டு, மறுபுறம் 54 புதிய மதுபானங்களை அறிமுகப்படுத்துகிறோம் என்று அறிவிப்பது மக்களை ஏமாற்றும் இரட்டை நிலைப்பாடு அல்லவா?

மக்களின் நலனில் அரசுக்கு அக்கறை இருக்கிறது என்றால், மது விற்பனையைக் குறைத்து, மதுபான கடைகளைக் குறைத்து, மக்களின் நல்வாழ்வுக்கு முன்னுரிமை கொடுப்பதையே உறுதியாக நடைமுறைப்படுத்த வேண்டும். எனவே, புதிய 54 வகையான மதுபானங்களை அறிமுகப்படுத்தும் திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். மது விற்பனையை விரிவுபடுத்தும் திட்டங்களைக் கைவிட்டு, இளைஞர்களின் எதிர்காலத்தையும், பெண்களின் பாதுகாப்பையும், குடும்பங்களின் அமைதியையும், சமூகத்தின் ஒழுக்கத்தையும் பாதுகாக்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழில்நுட்பத்தை சமூக நன்மைக்காக பயன்படுத்துங்கள் சென்னை ஐ.ஐ.டி.யில் சான்சிபார் அதிபர் ஹூசைன் அலி பேச்சு

சென்னை, ஜூலை 19

கிழக்கு ஆப்பிரிக்க நாடானதான்சானியாவின் கட்டுப்பாட்டில் சான்சிபார் தீவுக்கூட்டம்(Archipelago) அமைந்துள்ளது. இதன் அதிபரான ஹூசைன் அலி மின்யி சென்னை ஐ.ஐ.டி. கல்லூரியில் நடைபெற்ற 63வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த விழாவில் அவர் பேசியதாவது;

''ஒரு புதிய கண்டுபிடிப்பு நம்மை வியக்க வைக்கும்போது மட்டுமல்ல, மனித வாழ்வின் கண்ணியத்தை மேம்படுத்தும் போது தான் அதன்மிகச்சிறந்த நிலையை அடைகிறது. உங்கள் பணிகள் சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றமே உங்கள் வெற்றிக்கான அளவுகோலாகும். தொழில்நுட்பத்தைசமூகநன்மைக்காக பயன்படுத்துங்கள்.

கல்வி மற்றும் புதிய கண்



டுபிடிப்புகளால் ஏற்படும் மாற்றத்தை உருவாக்கும் ஆற்றல் இந்தியாவிற்கு உள்ளது. ஒரு நாடு அறிவியலில் முதலீடு செய்யும் போது, அது தனது எதிர்காலத்தில் முதலீடு செய்கிறது. சிறந்தகல்வி நிறுவனங்கள் மாணவர்களுக்குக் கல்வி அளிப்பதோடு மட்டுமல்லாமல், சமூகங்களை வடிவமைக்கவும், பொருளாதாரங்களை வலுப்படுத்தவும், தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கவும் செய்கின்றன.''

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பழனி முருகன் கோவில் நில மோசடியில் மிகப்பெரிய சதி திமுக குற்றச்சாட்டு

பழனி, ஜூலை 19

பழனி முருகன் கோவிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்புள்ள 1.41 ஏக்கர் நிலத்தை தனியார் இருவர் பதிவு செய்துள்ளனர். இதுபற்றி இரண்டு அமைச்சர்கள் முன்னுக்கு பின் முரணாக பேசி வருகின்றனர். இந்த நிலம் கோவிலுக்கு சொந்தமானது, இதை பதிவு செய்ய கூடாது என சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கோவில் தரப்பில் இருந்து ஏற்கனவே கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியில் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்த நிலத்தை கைப்பற்றி கோவில் கார் பார்க்கிங்கிற்காக பயன்படுத்தப் பட்டது. ஆனால் இந்த நிலம் இப்போது திடீரென தனியார் பெயரில் பதிவு



செய்யப்பட்டது அதிர்ச்சியளிக்கிறது. இதன் பின்னால் சதி நடந்துள்ளது. பினாமி பெயரில் பத்திரப் பதிவு நடந்துள்ளது.

பழனிக்கே மொட்டை

இந்துக்களுக்கு எதிரி என்று எங்களின் மீது போலியாக அவதூறு பரப்பினார்கள். ஆனால் எங்களின் தி.மு.க. ஆட்சியில் இந்த இடம் பாதுகாக்கப் பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் நிலம் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. பழனிக்கு மொட்டை போடுவாங்க என்று தான் நாமெல்லாம் பார்த்தோம். ஆனால் பழனிக்கே விஜய் ஆட்சி மொட்டை போட்டுள்ளது.

தூய்மையான ஆட்சி என்று சொல்லக்கூடிய விஜய் அரசாங்கம் இன்றைக்கு கோவிலோட நிலத்தை இன்னொருத்தருக்கு 'ரிஜிஸ்டர்' பண்ணி கொடுத்துருக்கும்போது, நீங்க எப்படி எங்களை பார்த்து குற்றம் சுமத்த முடியும்? மக்கள் முன்னாடி வந்து உண்மையாக பேசணுமே தவிர, தேவையில்லாத அரசியல் சர்ச்சைகளை உருவாக்கி பிரச்சினைகளை திசை திருப்புவதற்காக மட்டுமே அமைச்சர் பிரஸ் மீட் நடைபெற்றிருக்கிறது. வழக்கு விசாரணை சரியாக நடைபெறவில்லை என்று சொன்னால், தி.மு.க. இது குறித்து நீதிமன்றத்திற்கு செல்வதற்கு தயங்காது.

இவ்வாறு அவர் கூறினார்.

## முதல் மனைவிக்கு தெரியாமல் 2வது திருமணம் செய்த வாலிபர் மீது வழக்கு

சேலம், ஜூலை 19

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே உள்ள வீரவனூர் பகுதியை சேர்ந்தவர் ராமர் (வயது 34). இவர் பெரம்பலூரில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் காவலாளியாக வேலை பார்த்து வருகிறார். ராமருக்கு ஏற்கனவே திருமணமாகி கவுசல்யா என்ற மனைவி உள்ளார். அவர் தற்போது கர்ப்பமாக இருக்கிறார்.

இந்த நிலையில் ராமர் இளம்பெண்ணை 2வதாக திருமணம் செய்து வீட்டிற்கு அழைத்து வந்துள்ளார். இதனை பார்த்து அதிர்ச்சி அடைந்த முதல் மனைவி கவுசல்யா ராமரிடம் இதுகுறித்து கேட்டுள்ளார். அப்போது கோபமடைந்த ராமர், கவுசல்யாவை சரமாரியாக தாக்கி உள்ளார்.

இது குறித்த புகாரின்பேரில் ஆத்தூர் அனைத்து மகளிர் போலீசார் ராமர், அவரது சகோதரி நித்யா, அண்ணன் பரிமணன் ஆகிய 3 பேர் மீது வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## சைபர் அடிமைத்தனம், வேலைவாய்ப்பு மோசடி தொடர்பான வழக்கில் முக்கிய குற்றவாளி கைது; காவல்துறை தகவல்

சென்னை, ஜூலை 19

சைபர் அடிமைதனம் மற்றும் வேலைவாய்ப்பு மோசடி வழக்கில் முக்கிய குற்றவாளி கைது செய்யப் பட்டுள்ளதாக காவல் துறை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தமிழ் நாடு காவல்துறை தலைமை இயக்குநர் / படைத்தலைவர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்ற பெயரில் இந்திய இளைஞர்களை ஏமாற்றி, கம்போடியா, வியட்நாம் மற்றும் லாவோஸ் உள்ளிட்ட நாடுகளுக்கு அனுப்பி, அங்கு இணையவழி மோசடி (Cyber Scam) நிறுவனங்களில் சைபர் அடிமைகளாக கட்டாயப்படுத்தி பணியமர்தப்பட்டது தொடர்பாக இந்திய அரசு மற்றும் இந்திய சைபர் கிரைம் ஒருங்கிணைப்பு மையம் (I4C) மேற்கொண்ட நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்கள் அவ்வாறு மீட்கப்பட்டவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் சி.பி.சி.ஐ.டியில் 26 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

கம்போடியாவில் இருந்து மீட்கப்பட்ட நபர்களில் வெற்றிவேல் (த/பெ. செல்வகுமார்), வயது 48, அழகரசன் நகர், 2வது தெரு, நாகை ரோடு, தஞ்சாவூர் என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில், தஞ்சாவூர் சி.பி.சி.ஐ.டி. குற்ற எண் 05/2024, ச/பி 120(B), 420, 368, 371 இதச மற்றும் பிரிவு 10 இந்திய குடியேற்றச் சட்டம், 1983 ன் படி கடந்த 10.08.2024 ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் சுந்தர் (எ) சுந்தராஜூலு என்பவர் 03.10.2024 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இவர் தஞ்சாவூரை சேர்ந்த ஆறு நபர்களிடம் கம்போடியாவில் கால்சென்டர் வேலை என்றும் அதிக சம்பளம் கிடைக்கும் என்றும் நம்ப வைத்து வேலைக்கு சேர்ப்பதற்கென்று லட்சகணக்கில் புகார்தாரர் உட்பட ஐந்து நபர்களிடம் பணம் பெற்றும் மலேசியாவில் வசித்து வரும் தேனி மாவட்டம் பந்துவார் பட்டி பகுதியைச் சேர்ந்த ஜெய் (எ) பாபு (த/பெ. காளியப்பன்) என்பவர் மூலம் விமான டிக்கெட் மற்றும் மற்ற ஏற்பாடுகளை செய்து தாய்லாந்து மூலம் கம்போடியாவிற்கு மேற்படி 6 நபர்களையும் அனுப்பியுள்ளார் என தெரிய வந்தது.

இந்த வழக்கில் ஜெய் (எ) பாபு கம்போடியாவிற்கு இணையதள மோசடி வேலைகள் செய்வதற்கு சைபர் அடிமைகளாக அனுப்பும் குற்ற செயல்களில் முக்கிய ஆட்சேர்ப்பு முகவராக செயல்பட்டுள்ளார் என்பதும் இவர் கம்போடியாவில் உள்ள ஏஜென்டுகளுடன் நேரடி தொடர்பில் இருந்து சுந்தர் அனுப்பிய மேற்படி ஆறு நபர்களையும் கம்போடியாவில் உள்ள "பாவெட்" (Pavet) என்ற நகரத்தில் உள்ள இணையதள மோசடி மையங்களில் (cybercrime compound) சைபர் அடிமைகளாக விற்று அதற்காக கம்போடியா முகவர்களிடம் பணம் பெற்றுள்ளனர். இவ்வாறு விற்கப்பட்டவர்களை கம்போடியா cybercrime compoundல் உள்ள ஏஜென்டுகள் போலியாக உருவாக்கிய பிட்காயின் முதலீட்டு செயலிகளில் பொதுமக்களிடம் இணையவழி மோசடி செய்ய கட்டாயப்படுத்தும் வேலையை செய்ய வைத்து வற்புறுத்தியுள்ளனர். அவர்களது கடவுச்சீட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு வெளியேற முடியாமல் தடுத்து வைக்கப்பட்டதும் அவர்கள் வேலை செய்ய மறுத்த போது உடல் மற்றும் மன ரீதியாக துன்புறுத்த ப்பட்டதும் தெரியவந்தது.

மேற்படி இருவர் மீது வழக்கு விசாரணை முடித்து ஜெய் தலைமறைவானதாக நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றம் இவர் மீது பிடிவாரண்ட் பிறப்பிந்திருந்த நிலையில் ஜெய் மலேசியா நாட்டில் இருந்ததால் இவர் மீது Lookout Circular பிறப்பிக்க சி.பி.சி.ஐ.டியில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது. மேற்படி ஜெய் (எ) பாபு என்பவர் 16.07.2026 ஆம் தேதி மலேசியாவில் இருந்து பாங்காங் வழியாக இந்தியாவின் பெங்களூரு விமான நிலையத்திற்கு வந்தபோது அவர் தஞ்சாவூர் சி.பி.சி.ஐ.டி. காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப் பட உள்ளது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'வி.சி.க. தேர்தலுக்காக உருவான இயக்கம் அல்ல, மக்களின் தேவைக்காக உருவானது' திருமாவளவன்

மதுரை, ஜூலை 19

மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் 'தமிழ் தேசிய எழுச்சி மாநாடு' தொடர்பான செயற்குழு கூட்டம் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வி.சி.க. தலைவர் திருமாவளவன் பேசியதாவது;

"ஒரு இயக்கம் உயிர்ப்போடு இருக்க வேண்டுமானால் 2 விஷயங்கள் தேவை. ஒன்று கொள்கை, கோட்பாடு என்கிற உயிர்ப்பு ஆற்றல். இன்னொன்று அதற்கான களமும், பணிகளும், போராட்டங்களும். கொள்கை, கோட்பாட்டை மட்டும் வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. வெறும் கோட்பாட்டை பேசிக்கொண்டு எதுவும் செய்ய முடியாது. அதற்கான களம் அமைப்பது, அந்த களத்தில் நின்று போராடுவது என்பதுதான் ஒரு இயக்கத்தை உயிர்ப்போடு வைத்திருப்பதற்கான அடிப்படை தேவைகளில் ஒன்று.

இது வெறும் தேர்தலுக்காக உருவான இயக்கம் இல்லை. மக்களின் தேவைக்காக உருவான இயக்கம். பெரும் பதவி அதிகாரம் என்கிற வேட்கையில் உருவான இயக்




கம் இல்லை. இது மக்களின் பாதுகாப்புக்காக உருவான இயக்கம். இது பதவிக்கானது அல்ல, பாதுகாப்புக்கானது.

எப்படியெல்லாம் வேலை செய்தால் ஓட்டு வாங்க முடியும் என்று சிந்திக்காமல் எப்படியெல்லாம் வேலை செய்தால் மக்களை பாதுகாக்க முடியும் என்று சிந்திக்கிற இயக்கம் இந்த இயக்கம். எப்படியெல்லாம் வேலை செய்தால் தொகுதி பங்கீடு செய்து கொள்ள முடியும் என்று சிந்திக்கிற இயக்கம் இல்லை இந்த இயக்கம். எப்படியெல்லாம் வேலை செய்தால் மக்கள் சந்திக்கிற சவால்களை எதிர்கொள்ள முடியும் என்று சிந்திக்கிற இயக்கம். ஆகவேதான் எத்தனை சுனாமிகள் அடித்தாலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி சேதப்படாமல் இருக்கிறது.

இப்படித்தான் நாம் தொடக்க காலத்தில் இருந்தே இந்த இயக்கத்தை உயிர்ப்போடு வைத்திருக்கிறோம். இந்த இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்தி கொண்ட ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த பங்களிப்பை செலுத்தியதன் அடிப்படையில்தான் இந்த இயக்கம் நாளுக்கு நாள் வலிமை பெற்று இன்றைக்கு தமிழகத்தில் ஒரு மாநில கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கிறது.

பொருளாதார வலிமை பெற்ற யாரும் நம்மோடு இல்லை. தொழிலதிபர்களோ, பெரு வணிகர்களோ, ஒப்பந்ததாரர்களோ இந்த இயக்கத்தில் யாருமில்லை. இந்த இயக்கத்திற்கு பெரிதாக கொடை அளிப்பதற்கும், துணை இருப்பதற்கும் தொழிலதிபர்களோ, பெரு வணிகர்களோ, ஒப்பந்ததாரர்களோ தயாராகவும் இல்லை.

சமகாலத்தில் நம்மோடு களத்திற்கு வந்த எத்தனையோ பல இயக்கங்கள் காணாமலும் போயிருக்கின்றன, வலுவிழந்து நீர்த்தும் போயிருக்கின்றன. ஆனால் எந்த பின்புலமும் இல்லாமல், யாருடைய தயவும் இல்லாமல், நம் சொந்த கைகளை ஊன்றி கரணம் போட்டு 'அந்தரத்திலே பந்தல் கட்டுவது' என்பார்களே, அப்படி அந்தரத்தில் பந்தல் கட்டி இன்றைக்கு ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக இந்த இயக்கம் பரிணாமம் அடைந்திருக்கிறது. அதை பெருமையோடு சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் இந்த இயக்கத்தின் கிளைகள் எங்கு வேண்டுமானாலும் பரவி தழைத்திருக்கலாம். ஆனால் இந்த இயக்கத்தின் ஆணிவேர் மதுரை மண்தான் என்பதை என்றென்றைக்கும் பெருமையோடு பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இயக்கம் இன்றைக்கு எளிய மக்களுக்குக்கான ஒரு பாதுகாப்பு அரணாக விளங்குகிறது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஊழல் குற்றச்சாட்டுகளில் வேகமான நடவடிக்கை எடுக்கப்படும்: அமைச்சர் செங்கோட்டையன்

கோவை ஜூலை 19

ஊழல் குற்றச்சாட்டுகளில் வேகமான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காரணம் இன்றி டெண்டர்கள் ரத்து செய்யப்படாது என கோவையில் வருவாய் துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் வருவாய் துறை அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்களை சந்தித்து பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்தார்.

கோவை செம்மொழி பூங்கா அமைப்பில் ரூ.40 கோடி ஊழல் நடைபெற்றதாக எழுந்துள்ள குற்றச்சாட்டு குறித்து கேட்கப்பட்டபோது, புதிய அரசு தற்போது தான் பொறுப்பேற்றுள்ளதாகவும், இதுபோன்ற விவகாரங்கள் முந்தைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்றவை என்றும் தெரிவித்தார். தவறுகள் குறித்து அரசு ஏற்கனவே நடவடிக்



கைகளை தொடங்கியுள்ளதாகவும், ரேஸ் கோர்ஸ் தொடர்பான சில டெண்டர்களும் கூடுதல் மதிப்பீடுகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும், "முதல்அமைச்சர் விஜய் தலைமையிலான ஆட்சியில் எந்த தவறும் நடக்க கூடாது என்பதில் அரசு உறுதியாக உள்ளது. நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி டெண்டர்களின் காலக்கெடு அடுத்த ஆண்டு வரை இருப்பதால் அதுவரை காத்திருக்க வேண்டும். காரணமின்றி எந்த டெண்டரையும் ரத்து செய்ய முடியாது. தேவையான ஆய்வுகளின் அடிப்படையில் முதல்அமைச்சர் தெளிவான முடிவுகளை எடுப்பார்" என்றார்.

ஆம்னி பேருந்துகள் அரசு பேருந்துகளுக்கான கட்டணத்திலேயே சேவையை இயக்குவதாக அறிவித்திருப்பது குறித்து பேசிய அவர், "இது வரவேற்கத்தக்க நடவடிக்கை. கூடுதல் கட்டணம் வசூலிக்காமல் அரசு நிர்ணயித்த கட்டணத்திலேயே சேவையை வழங்குவது பொதுமக்களுக்கு பயனுள்ளதாகவும், நாட்டின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையும்" என்றார்.

ரெஸ்ட்ரோ பார் விவகாரம் குறித்து கேட்கப்பட்டபோது, போதைப்பொருள் ஒழிப்பில் அரசு தீவிரமாக செயல்பட்டு வருவதாகவும், தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகள் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். இது குறித்து முதல்அமைச்சர் படிப்படியாக தேவையான முடிவுகளை எடுப்பார் என்றும் கூறினார்.

"பழனிக்கே மொட்டை போட்டுவிட்டார்கள்" என்ற எதிர்க்கட்சியினரின் விமர்சனம் குறித்து கேட்கப்பட்டபோது, "பழனிக்கு மொட்டை போட்டவர் யார் என்பது காலப்போக்கில் தெரியும்" என்று அமைச்சர் செங்கோட்டையன் பதிலளித்தார்.

## பணி நியமனம் வழங்கக்கோரி எழும்பூரில் ஆசிரியர்கள் கண்கட்டி உண்ணாவிரத போராட்டம்

சென்னை, ஜூலை 19

தமிழகத்தில் தகுதி தேர்வு மற்றும் நியமன தேர்வுகளில் தேர்ச்சி பெற்றும் இன்னும் பணி நியமனம் வழங்கப்படாததை கண்டித்து, ஆசிரியர்கள் சென்னையில் இன்று நூதன முறையில் கண்களில் சிவப்பு துணி கட்டி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.




தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பினர் மற்றும் 2024ஆம் ஆண்டு நடைபெற்ற இடைநிலை ஆசிரியர் நியமன தேர்வில் தேர்ச்சி பெற்ற தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் இன்று காலை சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே திரண்டனர். அவர்கள் தங்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணை வழங்கக்கோரி திடீர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் அனைவரும் தங்களது கண்களில் சிவப்பு நிற ரிப்பன்களை கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தனர். தங்களின் வாழ்வாதார போராட்டத்தை அரசு இன்னும் கவனித்து பார்க்கவில்லை என்பதை உணர்த்தும் விதமாக இந்த நூதன முறையை கையாண்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

2024 நியமன தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களில் குறைந்த அளவில் ஆசிரியர்களுக்கு மட்டுமே பணி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய அனைத்து ஆசிரியர்களுக்கும் உடனடியாக பணி நியமனம் வழங்க வேண்டும். எந்தவொரு மறுதேர்வும் இன்றி, தகுதி பட்டியலில் உள்ளவர்களுக்கு நேரடியாக வேலை வழங்கப்பட வேண்டும். அரசு பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை விரைந்து நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். 1 ஆசிரியர் மட்டுமே உள்ள அரசு பள்ளிகளை மாற்றி, குறைந்தபட்சம் 5 ஆசிரியர்களை கொண்ட பள்ளிகளாக தரம் உயர்த்த வேண்டும்.

இது உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது. ஆசிரியர்களின் இந்த கண்கட்டி போராட்டம் அந்த வழியே சென்ற பொதுமக்களின் கவனத்தை ஈர்த்ததுடன், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான சூழலை ஏற்படுத்தியது.

## தணிக்கைத் துறை தொடர்பான மக்களின் குறைகளுக்கு தீர்வு காண புதிய தளம் தமிழக அரசு அறிவிப்பு

சென்னை, ஜூலை 19

தணிக்கைத் துறை தொடர்பான மக்களின் குறைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண புதிதாக 'பொதுமக்கள் குறைதீர்த்திடும் தளம்' (Public Grievance Portal) உருவாக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தலைமை தணிக்கை இயக்குநர் கட்டுப்பாட்டில் ஐந்து தணிக்கை துறைகளான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, மாநில அரசு தணிக்கைத் துறை,

கூட்டுறவு தணிக்கைத் துறை, இந்து சமய அறநி




றுவனங்களின் தணிக்கைத் துறை மற்றும் பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை இயங்கி வருகின்றது.

தணிக்கைத் துறையில் வெளிப்படைத்தன்மையும், தணிக்கை நிறுவனங்கள் மற்றும் தணிக்கையாளர்களின் வசதிகளையும் மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, பொதுமக்கள் மற்றும் தணிக்கை நிறுவனங்கள் தங்களது குறைகளை எளிதாக தீர்க்கவும், தேவையான விவரங்களை உடனுக்குடன் பெறவும் புதியதாக பொதுமக்கள் குறைகள் தீர்த்திடும் தளம் (Public Grievance Portal) CAMS வலைதளத்தின் ஒரு பகுதியாக புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தளத்தின் மூலம் பொதுமக்கள் மற்றும் தணிக்கை மேற்கொள்ளப்படும் நிறுவனங்கள் தங்களது குறைகளை / சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. அதன் விவரம் பின்வருமாறு;

*URL ID: https://cams.tn.gov.in*

*Menu Name: Public Grievance Portal"*

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் மத்திய அரசுக்கு திமுக ஆதரவா? ஆர்.எஸ்.பாரதி பதில்

சென்னை, ஜூலை 19

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வருகிற 18ந்தேதி தொடங்கி ஆகஸ்டு 13ந்தேதி வரை நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தொடரில் நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு மசோதாவை சில திருத்தங்களுடன் தாக்கல் செய்வதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. தற்போது 'இந்தியா' கூட்டணியில் பிளவு ஏற்பட்டுள்ளதால், இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கு தி.மு.க. மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சிகளிடம் ஆதரவு கேட்கும் முயற்சியில் பா.ஜனதா ஈடுபட்டுள்ளது என்றும், அவர்கள் இந்த மசோதாவை ஆதரிக்க கூடாது என்றும் முன்னாள் மத்திய மந்திரி ப.சிதம்பரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த நிலையில், தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அளித்த பேட்டியில் கூறியதாவது: 20ந்தேதி தொடங்கும் நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடரில் மத்திய பாஜக அரசால் தாக்கல் செய்யப்பட வாய்ப்புள்ள முன்மொழியப்பட்ட மசோதாவின் திருத்தப்பட்ட வரைவைப் பார்த்த பிறகுதான் தொகுதி மறுவரையறை பிரச்சினை குறித்து தி.மு.க. முடிவெடுக்கும். நாங்கள் தொகுதி மறுவரையறை மசோதாவை ஏற்கனவே தோற்கடித்துள்ளோம். எனவே இந்த மசோதா மீண்டும் தாக்கல் செய்யப்படும்போது அதன் உள்ளடக்கத்தை நாங்கள் பரிசீலிப்போம். அது தமிழ்நாடு உள்பட தென்னிந்திய மாநிலங்களின் நலன்களுக்கு எதிராக இருந்தால் தி.மு.க. அதை எதிர்க்கும். நாங்கள் ஏற்கனவே அளித்துள்ள பரிந்துரைகளைச் மத்திய அரசு சேர்த்திருந்தால், தி.மு.க. அதை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை. மாநில உரிமைகளுக்கான தனது போராட்டத்தில் தி.மு.க. என்றைக்கும் உறுதியாக இருக்கும். தி.மு.க. அளித்துள்ள பரிந்துரைத்த மாற்றங்கள் மசோதாவில் சேர்க்கப்பட்டால், பா.ஜனதா தனது நிலைப்பாட்டை தளர்த்தியுள்ளது என்று அர்த்தம்' இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

19.07.2026

# காவலர் தேர்வை தள்ளி வைக்கக் கூடாது உதயநிதி ஸ்டாலின்



சென்னை, ஜூலை 19

எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்தது முதலே குற்றச்சம்பவங்கள் பெருகி வரும் நிலையில், முன்பை விட கூடுதலாக தற்போது காவலர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால் நடப்பாண்டுக்கான காவலர்கள் நியமனத்தை இன்னும் ஓராண்டுக்கு இந்த அரசு தள்ளி வைத்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் அறிவிப்பின்படி அடுத்த ஆண்டு தான் காவலர்கள் தேர்வுக்கான அறிவிப்பு வெளியாகவிருக்கிறது. இது, காவல் துறை பணிக்காக காத்திருக்கும் லட்சக்கணக்கான இளைஞர்களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்திருக்கிறது. இதன் மூலம், ஏற்கெனவே சீர்கெட்டுக் கிடக்கும் சட்டம் ஒழுங்கையும், காவல்துறை பணியின் மீது ஆர்வம் கொண்ட இளைஞர்களின் எதிர்காலத்தையும் ஒருசேர கேள்விக்குறியாக்கி இருக்கிறது இந்த அரசு. எனவே, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையம் தற்போது வெளியிட்டிருக்கும் அட்டவணையை உடனடியாக திரும்பப் பெற்று, நடப்பு ஆண்டிலேயே காவலர்களை நியமிப்பதற்கான பணிகளை தொடங்க வேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தொகுதி மறுவரையறை மசோதா நிறைவேற தி.மு.க.விடம் ஆதரவு கேட்போம்: மத்திய மந்திரி ராம்தாஸ் அத்வாலே



சென்னை, ஜூலை 19

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணை மந்திரியும், இந்திய குடியரசு கட்சியின் தேசிய தலைவருமான ராம்தாஸ் அத்வாலே சென்னையில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் தலித்கள் மீதான வன்கொடுமைகள், கொலை சம்பவங்களும் அதிகரித்துள்ளது. இதனை தடுக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 8 ஆயிரத்து 352 கலப்பு திருமணங்கள் நடந்துள்ளன. இது வரவேற்கத்தக்கது. அமைச்சர்கள் சம்பத்குமார், வன்னியரசு அளித்த துறை சம்பந்தமான கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும்.

கடந்த முறை தோல்வி அடைந்த பெண்களுக்கான இட ஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை ஆகிய 2 மசோதாக்களும் வருகிற நாடாளுமன்ற கூட்டத்தொடரில் பெரும்பான்மையுடன் நிறைவேறும். இந்தியா கூட்டணியில் காங்கிரஸ் தி.மு.க. இடையே உறவில் பிளவு, மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரசில் இருந்து 20 எம்.பி.க்கள் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவு மூலம் இந்த மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற வாய்ப்பு உள்ளது.

காங்கிரசுக்கு எதிரான நிலைப்பாட்டை தி.மு.க. எடுக்கும் அல்லது நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பை புறக்கணிக்கும் என எதிர்பார்க்கிறோம். இல்லையென்றாலும் தொகுதி மறுவரையறை மசோதா நிறைவேற ஆதரவு தெரிவிக்குமாறு தி.மு.க.விடம் பா.ஜனதா தலைமை பேச்சுவார்த்தை நடத்தும். தமிழகத்தில் ஆணவ படுகொலைக்கு எதிராக தனிச் சட்டம் கொண்டு வருவது வரவேற்கத்தக்கது.

த.வெ.க. அரசு ஆட்சியமைக்க தேசிய ஜனநாய கூட்டணி கட்சியின் ஆதரவை கேட்கும் என எதிர்பார்த்தோம். ஆனால் தி.மு.க. கூட்டணியை சேர்ந்த இதர கட்சிகளின் ஆதரவு பெற்று ஆட்சி அமைத்தது. தமிழக அரசுக்கு தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்கும். தமிழக அரசு ஆதிதிராவிடர் நலத்துறையை சமூகநீதி துறை என பெயர் மாற்றியது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு ராம்தாஸ் அத்வாலே கூறினார்.

# திமுக ஆட்சியின் மற்றொரு ஊழல் முறைகேடு இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது வானதி சீனிவாசன்



சென்னை, ஜூலை 19

திமுக ஆட்சியின் மற்றொரு ஊழல் முறைகேடு இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது என்று வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பாஜக தேசிய மகளிரணி தலைவர் வானதி சீனிவாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதில் தெரிவித்திருப்பதாவது;

கோவை செம்மொழி பூங்கா திட்டப்பணிகளில் சுமார் ரூ.40 கோடி வரை ஊழல் நடந்துள்ளதாக தென் மண்டல ஒப்பந்ததாரர்கள் சங்கம் புகார் அளித்துள்ளதாக கூறப்படும் செய்தியானது கடும் அதிர்ச்சி அளிக்கிறது.

எந்த திட்டங்களில் எவ்வளவு கமிஷன் கிடைக்கும், எவ்வளவு ஊழல் செய்யலாம் என்று நாடி நரம்பெல்லாம் ஊழல் ஊறிப்போன கடந்த கால திமுக ஆட்சியின் மற்றொரு ஊழல் முறைகேடு இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. சுமார் 40 கோடி ரூபாய் அளவிற்கு போலி பில்கள் தயாரித்து கோவை மாநகராட்சி நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருப்பதாக கூறப்படுவது மக்கள் வரிப்பணம் எந்த அளவிற்கு குறிப்பிட்ட சிலரால் சூறையாடப்பட்டிருக்கிறது என்பதற்கான சாட்சி.

மேலும் அதே புகாரில் தேர்தல் செலவுக்காக 5 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட சாலைகளை தேர்வு செய்து மீண்டும் அதில் பணிகள் மேற்கொண்டு அதிலும் முறைகேடு செய்திருப்பதாக கூறப்படுவது அதிர்ச்சியிலும் பேரதிர்ச்சி. இவற்றையெல்லாம் பார்க்கும்போது 'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே..' என்னும் பாடல் தான் நினைவுக்கு வருகிறது.

இந்த முறைகேடு குறித்து இன்றைய கோவை மாநகராட்சி மாமன்ற கூட்டத்திலும் விவாதம் எழுப்பப்பட்டு சர்ச்சையை கிளப்பியிருக்கிறது.

தமிழ்நாடு முதல்அமைச்சர் ச. ஜோசப் விஜய் ஊழல் கறைபடியாத ஆட்சி அமைப்பேன் என்று உறுதி கூறி பதவியேற்றிருக்கும் உங்கள் அரசு இந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் யார் என கண்டறிந்து, அதற்கு துணை போன அதிகாரிகள், ஒப்பந்தகாரர்கள் ஆகியோரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மூலம் வழக்குப் பதிவு செய்து, முறைகேடாக பயன்படுத்தப்பட்ட மக்களின் வரிப்பணத்தினை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (19.07.2026)

மேஷம்: புதிய முயற்சிகளில் முன்னேற்றம். குடும்பத்தில் மகிழ்ச்சி. செலவுகளில் கவனம்.

ரிஷபம்: பணவரவு சுமாராக இருக்கும். வேலை தொடர்பான நல்ல செய்தி கிடைக்கலாம்.

மிதுனம்: நண்பர்களின் உதவியால் ஒரு காரியம் நிறைவேறும். உடல்நலத்தில் அக்கறை தேவை.

கடகம்: தொழிலில் வளர்ச்சி. குடும்பத்தினருடன் நல்ல புரிதல் ஏற்படும்.

சிம்மம்: தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய பொறுப்புகள் வரலாம்.

கன்னி: கல்வி, வேலை இரண்டிலும் முன்னேற்றம். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

துலாம்: பொருளாதார நிலை மேம்படும். பயண வாய்ப்பு கிடைக்கலாம்.

விருச்சிகம்: பொறுமையுடன் செயல்பட்டால் வெற்றி உறுதி. உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

தனுசு: புதிய வாய்ப்புகள் தேடி வரும். முதலீட்டில் நிதானம் அவசியம்.

மகரம்: வேலைப்பளு அதிகரிக்கலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

கும்பம்: குடும்பத்தில் சுபநிகழ்ச்சி தொடர்பான பேச்சுகள் நடைபெறலாம். செலவுகளை கட்டுப்படுத்துங்கள்.

மீனம்: மனநிம்மதி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் காண வாய்ப்பு உள்ளது.

# தென்காசி: கோட்டை மலையில் பயங்கர தீ.. அரியவகை மூலிகைகள் கருகி நாசம்



தென்காசி, ஜூலை 19

தென்காசி மாவட்டம் புளியங்குடி வனச்சரகத்திற்கு உட்பட்ட மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள கோட்டை மலை பீட் பகுதியில் திடீரென நேற்று மதியம் காட்டுத்தீ ஏற்பட்டது. காற்றின் வேகம் காரணமாக தீ வேகமாக பல்வேறு இடங்களில் பரவி வருகிறது. தகவலறிந்த புளியங்குடி வனச்சரக அலுவலர் தலைமையில் வனத்துறையினர் 15க்கும் மேற்பட்டோர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை கட்டுப்படுத்தும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த காட்டுத்தீயால் வனப்பகுதியில் காணப்படும் அரிய வகை மூலிகைச் செடிகள் கருகியதாக கூறப்படுகிறது. மேலும் வனவிலங்குகளும் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

# வரலாற்றில் முதல் முறை: சாம்பியன் அணிக்கு பிபா வழங்கும் பரிசு



23வது உலகக் கோப்பை கால்பந்து போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது. 48 அணிகள் பங்கேற்ற இந்த கால்பந்து திருவிழா 'கிளைமாக்சை' எட்டி விட்டது.

உலகக்கோப்பை கால்பந்து தொடரில் இந்திய நேரப்படி நாளை மறுநாள் நள்ளிரவு 12.30 மணிக்கு நியூஜெர்சியில் நடைபெறும் மகுடத்துக்கான இறுதிப்போட்டியில் அர்ஜென்டினா அணி, ஸ்பெயினுடன் மோதுகிறது.

2026 பிபா உலகக் கோப்பை கால்பந்து தொடரில் சாம்பியன் பட்டம் வெல்லும் அணிக்கு, உலகக் கோப்பை கோப்பை மற்றும் தங்கப் பதக்கங்களுடன், முதல் முறையாக பிரத்யேக 'சாம்பியன்ஷிப் ரிங்' (Championship Ring) வழங்கப்பட உள்ளது.

அமெரிக்க விளையாட்டு மரபை முன்மாதிரியாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள.

மொத்தம் 2,026 சிறப்பு மோதிரங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதில் 30 மோதிரங்கள் சாம்பியன் அணியின் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் குழுவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,996 மோதிரங்கள் உலகம் முழுவதும் ரசிகர்களுக்கான அதிகாரப்பூர்வ நினைவுப் பொருளாக விற்பனை செய்யப்பட உள்ளன.

இறுதிப் போட்டி முடிந்தவுடன், சாம்பியன் அணியின் கேப்டன் மற்றும் தலைமைப் பயிற்சியாளருக்கு தற்காலிக சாம்பியன்ஷிப் ரிங் வழங்கப்படும். பின்னர், 30 வீரர்களுக்கும் தனிப்பட்ட அளவுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட நிரந்தர மோதிரங்கள் அதிகாரப்பூர்வமாக வழங்கப்படும்.

# சுவிஸ் ஓபன் டென்னிஸ்: கேஸ்பர் ரூட் தோல்வி



சுவிஸ் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி சுவிட்சர்லாந்தில் உள்ள ஜிஸ்டாட் நகரில் நடந்து வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடந்த 2வது காலிறுதி சுற்றில் நார்வேயின் கேஸ்பர் ரூட், அர்ஜெண்டினாவின் ஜூலான் மேனுவல் செரண்டலோ உடன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் ஜூலான் மேனுவல் 36, 75, 62 என வென்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். இதன்மூலம் கேஸ்பர் ரூட் தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார்.

# 2வது டி20: ஜிம்பாப்வேவை வீழ்த்தி அபார வெற்றி பெற்ற வங்காளதேசம்



வங்காளதேசகிரிக்கெட் அணி ஜிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 1 டெஸ்ட், 3 ஒருநாள், 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் டெஸ்ட் போட்டியில் ஜிம்பாப்வே வென்றது. இதையடுத்து நடந்த ஒருநாள் தொடரையும் 21 என்ற புள்ளி கணக்கில் ஜிம்பாப்வே கைப்பற்றியது.

இதனை தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையே நடந்த முதல் டி20 போட்டியில் வங்காளதேசத்தை வீழ்த்தி ஜிம்பாப்வே அபார வெற்றிபெற்றது.

இந்நிலையில், ஜிம்பாப்வே, வங்காளதேசம் இடையேயான 2வது டி20 போட்டி புலாவாயோ மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த வங்காளதேசம் 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 186 ரன்கள் சேர்த்தது.

இதையடுத்து 187 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற சவாலான இலக்குடன் களமிறங்கிய ஜிம்பாப்வே 19.4 ஓவரில் 152 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

இதன் மூலம் ஜிம்பாப்வேவை 34 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வங்காளதேசம் அபார வெற்றிபெற்றது. இதனால் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 11 என்ற புள்ளி கணக்கில் இரு அணிகளும் சம நிலையில் உள்ளன. இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி டி20 போட்டி நாளை நடைபெற உள்ளது.

# டி.வி. நிகழ்ச்சியில் வருகிறாரா சமந்தா?



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக ஜொலித்த சமந்தா, மயோசிடிஸ் நோயால் பாதிக்கப்பட்டு சினிமாவில் இருந்து ஒதுங்கினார். பின்னர் ஒருவழியாக மீண்டு வந்த சமந்தா, முன்பு போல படங்கள் நடிக்க தொடங்கினார்.

ராஜ் நிடிமொருவை திருமணம் செய்து கொண்ட அவர், நடிப்பு தாண்டி பட தயாரிப்பிலும் ஈடுபட்டு வருகிறார். சமந்தா நடித்து, தயாரித்த 'எங்கள் தங்கம்' படம் சமீபத்தில் வெளியாகி ரூ.100 கோடி வசூலை குவித்தது.

சமீபத்தில் தான் கர்ப்பமாக இருப்பதாக அறிவித்த சமந்தா, சினிமாவில் சில மாதங்கள் 'பிரேக்' எடுக்கவுள்ளார். ஆனால் வேறொரு ரூபத்தில் ரசிகர்களை சந்திக்க வருகிறார். டி.வி.யில் விரைவில் ஒளிபரப்பாக இருக்கும் புதிய நிகழ்ச்சி ஒன்றை நடிகை சமந்தா தொகுத்து வழங்க உள்ளாராம். இது ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

# கிஷன் தாஸ் நடித்துள்ள "சீ யூ" படத்தின் கிளிம்ஸ் வீடியோ வெளியீடு




'சீ யூ' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை சமீபத்தில் நடிகர் ஆர்யா தனது சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டார். அந்த போஸ்டர் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. இதையடுத்து, படத்தின் வெளியீட்டு தேதி குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என ரசிகர்கள் எதிர்பார்த்து வருகின்றனர்.

'சீ யூ' திரைப்படத்தின் டைட்டில் டீசரை நடிகர் தனுஷ் சமீபத்தில் வெளியிட்டார்.

இந்த நிலையில், "சீ யூ" திரைப்படத்தின் முதல் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். எம் எஸ் பாஸ்கர், அருண் குமார், அக்ஷயா, கார்த்திக் ஆகியோர் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

# லோகேஷ் கனகராஜின் "டிசி" படத்தின் 2வது பாடல் இன்று வெளியீடு




கேங்ஸ்டராக லோகேஷ்... முக்கிய வேடங்களில் வாமிகா கபி, சஞ்சனா

சன் பிக்சர்ஸ் தயாரிக்கும் 'டிசி' திரைப்படத்தில் லோகேஷ் கனகராஜ் 'தேவதாஸ்' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக வாமிகா கபி 'சந்திரா' கதாபாத்திரத்தில் நடித்துள்ள நிலையில், சஞ்சனா உள்ளிட்ட பலரும் முக்கிய வேடங்களில் இடம்பெற்றுள்ளனர். அனிருத் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ளார். சமீபத்தில் வெளியான கிளிம்ப்ஸ் மற்றும் டிரெய்லர் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன. அதில் வாமிகா கபி மற்றும் சஞ்சனா பாலியல் தொழிலாளிகளாகவும், லோகேஷ் கனகராஜ் கேங்ஸ்டராகவும் நடித்திருப்பது தெரியவந்தது. பழிவாங்கும் கதைக்களத்தில் உருவாகியுள்ள இப்படத்தின் டிரெய்லரில் இடம்பெற்றுள்ள வன்முறை மற்றும் ரத்தம் தெறிக்கும் காட்சிகள் சமூக வலைதளங்களில் அதிகம் பேசப்பட்டன.

ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் 'டிசி' படத்திலிருந்து வெளியான 'ராகா ஆப் ரிவெஞ்' மற்றும் 'ஹேங்க் ஓவா' பாடல்கள் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்று படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளன.

மத்திய திரைப்பட தணிக்கை வாரியம் (CBFC) 'டிசி' திரைப்படத்திற்கு 'ஏ' (Adults Only) சான்றிதழ் வழங்கியுள்ளது. இதனால், வன்முறை நிறைந்த ஆக்சன் திரைப்படமாக 'டிசி' ரசிகர்களை திரையரங்குகளில் சந்திக்க தயாராகியுள்ளது. முன்னதாக வரும் ஜூலை 31ம் தேதி படம் திரைக்கு வரும் என தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது 'டிசி' படம் வரும் ஆகஸ்ட் 7ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் 'டிசி' படத்தின் அடுத்த பாடல் அறிவிப்பை படக்குழு இன்று வெளியிட்டுள்ளது. 'பும் பா டிகா டிகா' பாடல் நாளை மாலை 6 மணிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.